# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக குறிப்பு

இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி மற்றும் இலங்கை ஜனாதிபதி அதி மேதகு அநுர குமார திசாநாயக்க ஆகியோர் இடையில் 2026 மார்ச் 24 ஆம் திகதியன்று இடம்பெற்ற தொலைபேசி உரையாடலை அடுத்து 20000 மெட்ரிக் தொன் டீசல் மற்றும் 18000 மெட்ரிக் தொன் பெட்ரோல் அடங்கலாக 38000 மெட்ரிக் தொன் பெட்ரோலிய பொருட் தொகுதி கப்பல் மூலமாக 2026 மார்ச் 28 ஆம் திகதி இன்று கொழும்பை வந்தடைந்துள்ளது. 2026 மார்ச் 23 ஆம் திகதி இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் சு,ஜெய்ஷங்கர் மற்றும் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கௌரவ விஜித ஹேரத் ஆகியோருக்கு இடையிலும் தொலைபேசி உரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்தது.

2. மார்ச் மாதத்துக்கான எரிபொருள் விநியோகங்களை லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் மத்திய கிழக்கு மற்றும் சிங்கப்பூரிலிருந்து முன்னதாக பெற்றுக்கொண்டன. ஆனாலும், மத்திய கிழக்கில் நடைபெறும் மோதல்கள் காரணமாக ஏற்பட்ட விநியோகத் தடைகள் மற்றும் கப்பல்கள் இன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, குறித்த தேவைக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட விநியோகஸ்தர்கள், பொருட்களை வழங்கத் தங்களால் இயலாமையை வெளிப்படுத்தி, தவிர்க்க முடியாத சூழ்நிலையை (force Majeure) வெளிப்படுத்தியுள்ளனர்.

3. மேலே கூறப்பட்ட காரணங்களால் IOCL நிறுவனத்தால் மீட்பு விநியோகத்துக்கான கோரிக்கை இந்தியாவிடம் முன்வைக்கப்பட்டது. இவ்வாறன விநியோகத்தின் அங்கமாகவே தற்போதைய 38000 மெட்ரிக் தொன் பெட்ரோலியப் பொருட்கள் அமைகின்றன. எரிபொருள் விநியோக தொடர்ச்சியினை உறுதிப்படுத்தும் வகையில் லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் ஊடாக இந்திய அரசாங்கம் இலங்கைக்கு ஆதரவு வழங்கியுள்ளது.

***********

கொழும்பு
28 மார்ச் 2026